# பள்ளிகளில் காலைச் சிற்றுண்டி திட்டம்: நான் பெருமையாகக் கருதுகிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை - முதல் பக்கத் தொடர்ச்சி...

திட்டம், அதை நான் பெருமையாக சொல்வேன்.

ஏனென்றால், பசியோட படிக்க வருகின்ற குழந்தைகளுக்கு, முதலில் உணவு! அப்புறம்தான் வகுப்பறை என்று சொல்கின்ற மாதிரியான திட்டம் அது. வயிற்று பசியை போக்கிவிட்டால், உங்களுடைய அறிவுப் பசிக்கு உணவு கிடைத்துவிடும். இதை மனதில் வைத்துத்தான் காலைச் சிற்றுண்டித் திட்டத்தை நாம் உருவாக்கினோம்.

அதேபோல,

**பள்ளிக்கல்வித்துறை சார்பில்**
**மகத்தான திட்டங்கள்!**

- **இல்லம் தேடிக் கல்வி**
- **நான் முதல்வன்**
- **பள்ளி மேலாண்மைக் குழுக்கள்**
- **பள்ளி செல்லாப் பிள்ளைகளைக் கண்டறிய செயலி**
- **சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு சிறப்பு நிதி**
- **1ஆம் வகுப்பு முதல் 3ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு எண்ணும் எழுத்தும் இயக்கம்**
- **பயிற்சித் தாள்களுடன் கூடிய பயிற்சிப் புத்தகங்கள்**
- **9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு வினாடி வினா போட்டிகள்**
- **“மாணவர் மனசு” என்ற ஆலோசனைப் பெட்டி**
- **கணித ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி**
- **உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள்**
- **வகுப்பறை உற்று நோக்கு செயலி**
- **மின் ஆசிரியர் என்ற உயர்தர டிஜிட்டல் செயலி**

ஆகிய திட்டங்களை பள்ளிக் கல்வித் துறை சார்பில் நாம் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

**மாணவர்களை ஒழுக்கத்திலும்**
**பொறுப்பிலும் முதன்மையாக்கும் சிற்பி திட்டம்!**

இந்த வரிசையில்தான், இந்த ‘சிற்பி’ என்ற திட்டத்தை சென்னை காவல்துறை திட்டமிட்டது. இதை நான் தான் தொடங்கி வைத்தேன். நன்றாக படிக்கின்ற மாணவர்கள், ஒழுக்கத்திலும் நேர்மையிலும் துணிச்சலிலும் சமூகப் பொறுப்பிலும் சிறந்தவர்களாக உருவாக்க நம்முடைய சென்னை மாநகரத்தின் காவல் ஆணையர் மதிப்பிற்குரிய சங்கர் ஜிவால் அவர்களால் இந்த திட்டத்தை வடிவமைத்து, மாணவர்கள் படிப்பில் School first எடுக்க வைக்கின்ற மாதிரி, ஒழுக்கத்திலும், பொறுப்பிலும், முதன்மையானவர்களாக ஆக்குகின்ற திட்டம்தான் இந்த ‘சிற்பி திட்டம்’ என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த 13.09.2021 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் இந்தத் திட்டத்தைப் பற்றி நான் அறிவித்தேன். சென்னை மாநகரில் இருக்கக்கூடிய 100 அரசு பள்ளிகளில், பள்ளிக்கு தலா 50 மாணவர்கள் வீதம் பங்குபெறக்கூடிய வகையில் இது திட்டமிடப்பட்டது. சிறுவர்களை இளமைக்காலம் முதல் பொது ஒழுக்கம் உள்ளவர்களாகவும், சமூகப் பொறுப்புள்ளவர்களாகவும் ஆக்கக்கூடிய இந்தத் திட்டம் பயன்பட வேண்டும் என்று திட்டமிடப்பட்டது.

கடந்த 14.9.2022 அன்று கலைவாணர் அரங்கத்தில் இதை நான் தொடங்கி வைத்தேன். இந்தத் திட்டம் மூலம் குற்றமற்ற சிறந்த இளைய சமுதாயத்தினரை உருவாக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து, 2,558 மாணவிகள், 2,442 மாணவர்கள் சிறந்த பொறுப்புள்ள சீர்மிகு சிற்பிகளாக இன்றைக்கு நீங்கள் எல்லாம் உருவாகி இருக்கிறீர்கள் அதை பார்த்து நான் அளவு கடந்த மகிழ்ச்சி அடைகிறேன். இதை செய்துகாட்டுவதற்கு எல்லா வகைகளிலும் முயற்சியில் ஈடுபட்டு அதில் வெற்றி கண்டிருக்கக்கூடிய அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**சிற்பி திட்டத்தின் மூலம்**
**மாணவர்களுக்கு சிறப்புப் பாடங்கள்!**

இந்தத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு இப்போது நிறைவு விழா நடத்திக்கொண்டு இருக்கிறோம். உங்களுக்கு இதற்கான பாடப்புத்தகம், சீருடை தந்தார்களா? உங்களை கல்விச் சுற்றுலாவுக்கு அழைத்துக் கொண்டு போனார்களா? இந்த ஓராண்டு காலத்தில் சிற்பி மாணவர்களுக்கு கவாத்து, போக்குவரத்து விதிகள், கணிணி வழிக்குற்றங்கள், குழந்தைகளுக்கான பாதுகாப்பு வழிமுறைகள், நல்லொழுக்கம், பிளாஸ்டிக் ஒழிப்பு மற்றும் ஒலி மாசுபாடு, நாட்டுப்பற்று, போதைப் பழக்கம் தடுக்கும் முறைகள், தனிப்பட்ட சுகாதாரம், இயற்கையை பேணுதல், யோகா, மனித நலம், தற்காப்பு, அரசு வேலைக்குச் செல்ல வேண்டிய படிப்புகள், குதிரைப்படை, மோப்ப நாய் பிரிவு, இயற்கை வேளாண்மை, நல்ல தொடுகை, தீய தொடுகை கற்பித்தல் மற்றும் உதவி தொலைபேசி எண்கள் போன்ற வகுப்புகள் அந்தந்த துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய வல்லுனர்களாலும், காவல் துறையினராலும், சிற்பி நோடல் ஆசிரியர்களாலும் கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஐ.ஏ.எஸ் – ஐ.பி.எஸ் போன்ற பயிற்சிகளுக்கு செல்லும்போது தான் இதுபோன்ற பயிற்சிகளை உங்களுக்கு தருவார்கள். ஆனால், மிகச் சிறு வயதிலேயே இந்த பயிற்சியை தமிழ்நாடு அரசு உங்களுக்கு வழங்கி இருக்கிறது.

இந்தக் காலக்கட்டத்தில் நீங்கள் பல்வேறு சாதனைகளை செய்திருக்கிறீர்கள். அதையெல்லாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் என்னிடத்தில் பெருமையாக சொன்னார்கள்.

முக்கியமாக, காற்று மாசுபாட்டை கட்டுப்படுத்தும் விதமாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 5000 சிற்பி மாணவர்கள் சென்னை எழும்பூர் முதல் வண்டலூர் வரை சிறப்பு ரயில்களில் பயணம் செய்திருக்கிறார்கள்.

**வியப்பில் ஆழ்த்திய சிற்பி திட்டம்!**

இயற்கையை பேணும் விதமாக ஐந்தாயிரம் குழந்தைகளும் ஐந்து இலட்சம் விதைப் பந்துகள் செய்து வனத்துறையினரிடம் ஒப்படைத்திருக்கிறீர்கள். அது மட்டுமில்லாமல், ஐந்தாயிரம் மரக்கன்றுகளையும் நட்டிருக்கிறீர்கள்.

74ஆவது குடியரசு நாள் விழாவில், சிற்பி மாணவர் படையினராக அணிவகுப்பில் கலந்து கொண்டது அதுவும் மிடுக்கான நடையில் என்னை மிகவும் வியப்படைய வைத்திருக்கிறது.

இப்படி உங்களோட சாதனைகள் என்னை மட்டுமல்ல எல்லோரையும் வியப்படைய வைத்திருக்கிறது. இந்த இளம் வயதில் இந்தச் சாதனைகளைச் செய்ய உங்களுக்கு வாய்ப்பு கிடைத்திருப்பது நீங்கள் இதை ஒரு பெரிய மைல் கல்லாக நினைக்கவேண்டும்.

இதுபோன்ற செயல்கள் உங்களை மட்டுமல்ல, உங்கள் குடும்பத்தையும், உங்களுடைய சுற்றத்தையும் சீர்மைப்படுத்தும். அதோடு, சிறார் குற்றங்கள் கட்டுப்படுத்துவதில் தமிழ்நாடு காவல்துறை இன்றைக்கு சிறப்பான கவனத்தைச் செலுத்திக் கொண்டு வருகிறது.

சிறார்கள் குற்றச் செயல்களில் ஈடுபட குடும்ப உறுப்பினர்களோட கவனக் குறைவு, போதிய குடும்ப வருமானம் இல்லாமை, ஆதரவில்லாமல் சிறார்கள் வளர்வது, வேலைவாய்ப்பின்மை போன்றவை காரணமாக இருக்கிறது.

இந்தத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு இப்போது நிறைவு விழா நடத்திக்கொண்டு இருக்கிறோம். உங்களுக்கு இதற்கான பாடப்புத்தகம், சீருடை தந்தார்களா? உங்களை கல்விச் சுற்றுலாவுக்கு அழைத்துக் கொண்டு போனார்களா? இந்த ஓராண்டு காலத்தில் சிற்பி மாணவர்களுக்கு கவாத்து, போக்குவரத்து விதிகள், கணிணி வழிக்குற்றங்கள், குழந்தைகளுக்கான பாதுகாப்பு வழிமுறைகள், நல்லொழுக்கம், பிளாஸ்டிக் ஒழிப்பு மற்றும் ஒலி மாசுபாடு, நாட்டுப்பற்று, போதைப் பழக்கம் தடுக்கும் முறைகள், தனிப்பட்ட சுகாதாரம், இயற்கையை பேணுதல், யோகா, மனித நலம், தற்காப்பு, அரசு வேலைக்குச் செல்ல வேண்டிய படிப்புகள், குதிரைப்படை, மோப்ப நாய் பிரிவு, இயற்கை வேளாண்மை, நல்ல தொடுகை, தீய தொடுகை கற்பித்தல் மற்றும் உதவி தொலைபேசி எண்கள் போன்ற வகுப்புகள் அந்தந்த துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய வல்லுனர்களாலும், காவல் துறையினராலும், சிற்பி நோடல் ஆசிரியர்களாலும் கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இவற்றைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுத்து தடுக்க இது போன்ற திட்டங்கள் கைகொடுக்கும். போதை பொருள் ஒழிப்பு, குடிப்பழக்கத்திற்கு எதிரான நடவடிக்கைகள், சட்டம் சார்ந்த விழிப்புணர்வு பெறச் செய்தல், அரசு சார்ந்த மற்றும் அரசு சாரா அமைப்புக்களுடன் தொடர்பினை ஏற்படுத்துதல், சுய ஆளுமை திறனை மேம்படுத்துதல், பெற்றோர்களது பேச்சை மதித்து நடத்தல், பொது மக்களோடு தொடர்பு, இளம் வயதிலிருந்து போக்குவரத்து விதிகளை கடைபிடிக்க செய்தல், தேசிய விழாக்களை கொண்டாடுதல், தேசிய சின்னங்களுக்கு மரியாதை செய்தல், மாநிலத்தின் செழுமை மற்றும் வளர்ச்சியை கண்டு பெருமை கொள்ளச் செய்தல் ஆகிய பண்புகளை சிறுவர்களிடையே உருவாக்க வேண்டும். ஏனென்றால், இன்றைய இளைஞர்களே, நாளைய எதிர்காலம்.

இளைஞர்களை சீர்படுத்தினாலே, எதிர்காலத்தை சீர்படுத்த முடியும். அப்படி உருவாகக்கூடிய இளைஞர்கள் சிறந்த சமுதாயத்தை நிச்சயமாக செதுக்குவார்கள்.

**இந்தியாவிலேயே முதலிடத்திற்கு**
**முன்னேறும் கல்வித்துறை!**

தரமான கல்வி வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு இன்றைக்கு இரண்டாவது இடத்தில் இருக்கிறது. முதலிடத்திற்கு முன்னேறுவதற்கான அனைத்துப் பணிகளையும் பள்ளிக் கல்வித் துறை இன்றைக்கு சிறப்பாக செய்து கொண்டு வருகிறது.

என்னைப் பொறுத்தவரை, மாணவர்களை தரமான‘மனிதர்களாக’ உருவாக்குதே அரசாங்கத்தின் கடமையாக நான் கருதுகிறேன். இதில் முக்கியமாக ‘நான் முதல்வன்’ என்ற திட்டம் தமிழ்நாட்டு மாணவ மாணவியரை அனைத்துத் திறமைகளும் கொண்டவர்களாக வளர்க்கின்ற திட்டமாக இது அமைந்திருக்கிறது.

இதனுடைய பயன், தலைமுறை தலைமுறைக்கு நிச்சயமாக தொடரும். 100 விழுக்காடு படிப்பறிவு என்பதை நாம் நிச்சயம் எட்டியாக வேண்டும். அனைவருக்கும் கல்வியைக் கொடுத்தாக வேண்டும். இடையில் நின்றுவிடும் பிள்ளைகளை மீண்டும் பள்ளிக்குள் அழைத்து வர முயற்சிக்க வேண்டும். அதிலும் குறிப்பாக, கற்றல் குறைபாடுகள் உடைய குழந்தைகளுக்கு தனிக்கவனம் செலுத்த வேண்டும். பெண் குழந்தைகளை தன்னம்பிக்கை கொண்டவர்களாக மாற்ற வேண்டும்.

இங்கே வந்திருக்கின்ற உங்களிடம் நான் வைக்கின்ற வேண்டுகோள் ஒன்றே ஒன்றுதான். பள்ளியோடு கல்வியை நிறுத்திடாமல் எல்லோரும் கல்லூரிகளுக்கு போகவேண்டும்.

**மாணவர்களின் தேவைகளை**
**நிச்சயம் இந்த அரசு பூர்த்தி செய்யும்!**

நீங்க எதை பற்றியும் கவலைப்படாமல் படியுங்கள்! நன்றாக விளையாடி உடலை உறுதி செய்யுங்கள்! சமூகத்தைப் படியுங்கள்! அந்தக் கல்வியின் மூலமாக பகுத்தறிவையும், சுயமரியாதையையும் வளர்த்துக் கொள்ளுங்கள்! அறிவியல் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள்! அந்தப் படிப்பை வைத்து சிந்தியுங்கள்! புதிய புதிய கண்டுப்பிடிப்புகளை நிகழ்த்துங்கள்! படிப்பு மட்டும்தான் உங்களிடமிருந்து யாராலும் பிரிக்க முடியாத சொத்து!

உங்களுடைய படிப்பையும் திறமையும் பார்த்து, பெரிய பெரிய கம்பெனிகள் உங்களை அழைத்து வேலை கொடுக்க வேண்டும். நீங்களும் தொழில் தொடங்கி, நிறைய பேருக்கு வேலை கொடுக்க வேண்டும். உங்களோட மற்ற கவலைகளை போக்குவதற்கு மற்ற தேவைகளை பூர்த்தி செய்ய நம்முடைய திராவிட மாடல் அரசு இருக்கிறது. இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினான நான் இருக்கேன்! நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்படக் கூடாது. படிக்கின்ற காலத்தில் உங்களுக்கு வேறு எதிலும் கவனச் சிதறல்கள் இருக்கக் கூடாது.

இன்றைக்கு போதை ஒழிப்பு நாள்! அதனால் கேட்டுக்கொள்ள விரும்புவது, எந்தவிதமான போதைப் பழக்கத்திற்கும் நீங்களும் அடிமையாகக் கூடாது. உங்கள் நண்பர்களையும் அடிமையாக விடாதீர்கள்.

**போதையற்ற சமுதாயத்தை**
**உருவாக்க வேண்டும்!**

இன்றைக்கு உலக போதை ஒழிப்பு நாள்! உங்களை சுத்தியிருக்கிறவர்களுக்கு நீங்கள் சொல்ல வேண்டியது... “போதை என்பது உங்கள் உடலுக்கு மட்டுமல்ல, உங்கள் குடும்பத்திற்கு மட்டுமல்ல, நாட்டிற்கும், எதிர்காலத்திற்கும் அது மிக, மிக கேடு! அதனை புறந்தள்ளி போதையற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.”

இதைத்தான் நீங்கள் எல்லோருக்கும் சொல்ல வேண்டும். சொல்லுவீர்களா... சொல்லுங்க சொல்லுவீர்களா... எல்லோருக்கும்?

அன்புச் செல்வங்களே, அன்பு மாணவ கண்மணிகளே, நீங்கள் நல்லவர்களாக, வல்லவர்களாக, நம்பிக்கைக் கொண்டவர்களாக, நீதியில், நேர்மையில் உறுதி கொண்டவர்களாக திகழ என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகள்!

ஆல் தி வெரி பெஸ்ட்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### உலக வெண் புள்ளிகள் தினம்! தமிழ்நாடு அரசு

# மருத்துவக் கல்லூரிகளின் இணைப் பேராசிரியர் பதவி உயர்வு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

*சென்னை, ஜூன் 28-*

*மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று முன்தினம் (26.06.2023) சென்னை, சைதாப்பேட்டை, அன்னை வேளாங்கண்ணி மகளிர் கல்லூரியில், உலக வெண்புள்ளிகள் தினம் 2023 முன்னிட்டு, இந்திய வெண்புள்ளிகள் விழிப்புணர்வு இயக்கம் சார்பில், சேர்ந்து வரைவோம் மற்றும் விழிப்புணர்வு உறுதியேற்பு நிகழ்ச்சியை தொடங்கி வைத்து, வெண்புள்ளிகள் விழிப்புணர்வு உறுதிமொழியினை ஏற்றார்.*

*பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்ததாவது: -*

*வெண்புள்ளிகள் இயக்கம் என்கின்ற அமைப்பு கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் தொடர்ந்து பல முயற்சிகளை ஏற்படுத்திவருகிறார்கள். 2006 ல் இருந்து 2011 வரை தி.மு. கழகத்தின் ஆட்சியின் போது மனித சங்கிலி போன்ற பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. அப்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2010 ஆம் ஆண்டு வெண்குஷ்டம் என்று அழைக்கப்பட்டு வந்ததை வெண்புள்ளிகள் என்று அழைக்கவேண்டும் என்று அரசாணையினை வெளியிட்டார்.*

*தமிழ்நாட்டில் வெளியிடப்பட்ட இந்த அரசாணை தொடர்ச்சியாக இந்தியாவின் உத்திரப்பிரதேசம், மத்திய பிரதேசம், கர்நாடகா போன்ற 10க்கும் மேற்பட்ட மாநிலங்களில் அரசாணைகள் வெளியிடப் பட்டது. இந்த அரசாணைகளில் அனைத்திலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அரசால் வெளியிடப்பட்ட அரசாணை மேற்கோள்காட்டப்பட்டுள்ளது என்பது சிறப்பு. தொடர்ந்து தமிழ்நாடு அரசு மற்றொரு அரசாணையில், பள்ளிகளில் வெண்புள்ளி பாதிப்புள்ள மாணவர்கள் சேரும் போது, சேர்க்கையின் போதும், பாடம் புகட்டும்போதும் எவ்வித பாரபட்சமும் காட்டக்கூடாது என்கின்ற வகையில் அறிவுறுத்தலை வழங்கியுள்ளது.*

*தமிழ்நாட்டில் 37 இலட்சம் பேர் வெண்புள்ளிகளினால் பாதிக்கப் பட்டுள்ளார்கள். பொதுவாக குஷ்டம் என்று சொன்னால் தொழுநோய் என்று பொருள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 2030க்குள் தொழுநோய் இல்லாத தமிழகம் எனகின்ற நிலையை உருவாக்க தீவிர நடவடிக்கைகளை எடுக்க அரசுக்கு வலியுறுத்திவருகிறார்கள். அந்த வகையில் தமிழ்நாட்டில் தொழுநோயால் பாதிக்கப்பட்ட 4000 பேருக்கு ரூ.2000 உதவித் தொகையும், காலனிகள் மற்றும் கையுறைகளை*



*ஆண்டுதோறும் தந்து, தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டுவருகிறார்கள். தொழுநோய்க்கும், வெண்புள்ளிக்கும் சிறிதும் தொடர்பில்லாதபோது, அவர்களை அலட்சியப்படுத்துவது, பாரபட்சமாக நடத்துவது கூடாது என்கின்ற வகையில் இன்று இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது. ஆஷா பணியாளர்கள் புதியதாக வந்தவர்கள் அல்ல, இவர்கள் அனைவரும் கடந்த 10 ஆண்டுக்கு முன்னர் இருந்தே பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் தமிழ்நாடு அரசால் நேரடியாக பணியமர்த்தப்பட்டவர்கள் அல்ல. கிராமங்கள், மலைக் கிராமங்களில், செவிலியர்கள், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உதவியாக பல்வேறு பணிகளை செய்து கொண்டிருப்பவர்கள். ஒவ்வொரு நாளும் 4 முதல் 6 மணி நேரம் இவர்களது பணி நேரமாகும். இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்னாள் ரூ.3000 மட்டுமே இவர்களுக்கு தேசிய நலவாழ்வு குழுமத்தின் மூலம் உதவித்தொகை (Incentive) கிடைத்துக்கொண்டிருந்தது. இந்த உதவித்தொகை போதாது என்று ஒரு மாநாடு நடத்தி என்னையும் அழைத்து கோரிக்கையினை விடுத்திருந்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலையேற்று, ஒன்றிய அமைச்சர் அவர்களை சந்தித்து தொடர்ச்சியாக கோரிக்கை வைக்கப்பட்டு வந்தது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 2021க்கு பிறகு ஆஷா பணியாளர்களுக்கு தொற்றா நோய்கள் போன்ற சிகிச்சைகளுக்கு உதவியாக இருந்தால், ரூ.500 ஊக்கத் தொகை வழங்கப்படும் என்றும், அவசர உதவிகளுக்கு ரூ.100 ஊக்கத் தொகை வழங்கப்படும் என்று அறிவித்தார்.*

*இதன் விளைவாக இவர்கள் ரூ.4000 முதல் ரூ.6000 வரை உதவித்தொகையாக பெறுகிறார்கள். இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு இவர்களுக்கு உடை, வெப்பமானி, சீருடை சேலைகள், தொப்பி போன்ற பல்வேறு பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வளவு சலுகைகளும் இந்த ஆட்சி வந்ததற்கு பிறகு வழங்கப்பட்டு வருகிறது. இதுபோல் எதைப் பற்றியும் தெரிந்துக் கொள்ளாமல் ஒரு முன்னாள் முதலமைச்சராக இருந்தவர் அறிக்கை கொடுப்பது என்பது நகைப்பிற்குரியதாக உள்ளது.*

*தமிழ்நாடு அரசு மருத்துவக் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர் பதவியிலிருந்து இணைப் பேராசிரியராக 423 நபர்களுக்கு பதவி உயர்வு தரப்பட வேண்டும். இது தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் வழக்கு இருந்தது. அந்த வழக்கினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலைப்பெற்று துரிதப்படுத்தினோம். தமிழ்நாடு அரசு இவர்களுக்கு பதவி உயர்வு தருவதற்கு கலந்தாய்வு நடத்திக் கொள்ளலாம் என்கின்ற வகையில் தீர்ப்பு 06.07.2023 அன்று தர இருக்கிறார்கள். இவர்களுக்கு பதவி உயர்வே இல்லை, மருத்துவக் கல்லூரிகள் எல்லாம் மூடும் நிலைக்கு வந்துவிட்டது என்றெல்லாம் சொல்வது மிகவும் தவறான செய்தியாகும்.*

*எனவே இந்த உதவிப்பேராசிரியர்களுக்கு பதவி உயர்வு கலந்தாய்வு வருகின்ற 04.07.2023 அன்றே தொடங்க இருக்கின்றோம். உதவிப் பேராசிரியர்கள் அனைவரும் கலந்தாய்வில் கலந்து கொண்டு இணைப் பேராசிரியராக பொறுப்பேற்குமாறு அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.*

*இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.*

*இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற நீதிபதி ஆர்.பரஞ்சோதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, வெண்புள்ளிகள் விழிப்புணர்வு இயக்கம் சார்பில் கே.உமாபதி, முனைவர் டி.இ.திருவேங்கடம், அன்னை வேளாங்கண்ணி கல்விக் குழுமத்தின் நிறுவனத் தலைவர் முனைவர். எஸ்.தேவராஜ், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.*



விழுப்புரம் மாவட்ட மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்த்து துறை சார்பில் திண்டிவனத்தில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நடைபெற்ற பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாமினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்து முதலமைச்சரின் மருத்துவ காப்பீடு திட்டத்திற்கான அடையாள அட்டையை பயனாளிகளுக்கு வழங்கினார்.உடன் விழுப்புரம் மாவட்ட வருவாய் அலுவலர் பரமேஸ்வரி, திண்டிவனம் சார் ஆட்சியர் கட்டாரவி தேஜா உள்ளனர்.





நகராட்சி பகுதிகளில் வார்டு எண் 1ல் நகராட்சி நிர்வாக தூய்மை பணியாளர்கள் அதிகாரிகளுடன் வீதி வீதியாக சென்று டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. மக்களை சந்தித்து குறைகளைக் கேட்டறிந்து உடனடியாக நிறைவேற்றக்கூடிய பணிகளை துறை சார்ந்த அதிகாரிகளிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தினார். இந்நிகழ்வில் நகர் மன்ற உறுப்பினர்கள் பழனிவேல் மதியழகன், மை.பால்ராஜ் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.